நகராட்சி மூலமாக தக்க நடவடிக்கை எடுப்பார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூல் நிலைய வரி வசூலிக்கப்பட்ட பின்பும் நூலகத் துறைக்கு வந்து சேரவில்லை என்பதை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களோடு நடந்த அலுவலர்கள் கூட்டத்திலே விவாதித்து ஒரு முடிவு எடுத்திருக்கிறோம். விரைவில் அந்த நிதியைத் தருவதாக வாக்களித்து இருக்கிறார்கள். இங்கே, நிதிப் பிரச்சினை இல்லை. திட்ட மதிப்பீடு இன்னும் வந்து சேரவில்லை. அதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, நூல் நிலையத்தை விரிவுபடுத்த வேண்டும் என்பதற்கும், நூல் நிலைய வரி இன்னும் வரவில்லை என்பதற்கும் தொடர்பு இல்லை. நிதி இருக்கிறது. ஆகவே, அதற்கான நடவடிக்கைகள் விரைவில் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நூல் நிலைய வரியைப் பெறுவது குறித்து மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடத்திலே பேசி இருக்கிறோம். அது தொடர்பாக விரைந்து நடவடிக்கை எடுக்கப்படுவதாக அவர்களும் தெரிவித்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 120, திருமதி கவிநிலவு தர்மராஜ், மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர்.

120—

பேரூராட்சிகளில் மீன் வளர்ப்பு பயிற்சி மையம் அமைத்தல்

*** 26612—***திருமதி கவிநிலவு தர்மராஜ்:*

மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டம், மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி, மற்றும் ஊஞ்சலூர் பேரூராட்சிகளில் மீன்வளர்ப்பு பயிற்சி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், மீனளத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பெரியார் மாவட்டம் உள்நாட்டு மீன்வளர்ப்பு பணி நிறுவனம் மொடக்குறிச்சி தொகுதி கொடுமுடி மற்றும் உஞ்சலூர் பேரூராட்சிகளில் மீன்வளர்ப்பு பயிற்சி மையம் அமைக்கும் கருத்துரு/செயற்குறிப்பு தற்பொழுது ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

1995 மார்ச் 27]

திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது செயற்குறிப்பு அரிசிடம் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். கொடுமுடி ஒன்றியத்தைப் பொறுத்தவரை, மொடக்குறிச்சி தொகுதியில் 9 பேருராட்சிகளை தன்னகத்தே கொண்டு-கொடுமுடி, சிவகிரி, ஊஞ்சலூர், வெங்கம்பூர், வெள்ளோட்டாம்பரப்பு, கிளாம்பாடி, பாசூர் என்று பலதரப்பட்ட முக்கியமான பேருராட்சிகளை தன்னகத்தே கொண்டு- ஆற்றுக் கரையோரத்திலே இந்தப் பேருராட்சிகள் இருக்கின்ற காரணத்தினாலேயும், மீன்கள் அதிகமாக பிடிக்கப்பட்டு, மீன்வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கிற பேருராட்சிகளாக விளங்கிக் கொண்டிருக்கிற காரணத்தினாலேயும், மீன் வளர்ச்சிப் பணி பயிற்சி மையத்தை அந்தப் பகுதியிலே நிறுவினால், மீனவர்களுடைய காவல் தெய்வமாக விளங்கிக் கொண்டிருக்கும், அவர்களுடைய நல்வாழ்வுக்காக அனுதினமும் உழைத்துக் கொண்டிருக்கிற புரட்சித் தலைவியினுடைய புண்ணிய அரசுக்கு அது மென்மேலும் புகழையும், பெருமையையும் சேர்ப்பதாக இருக்கும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய செயற்குறிப்பை மீண்டும் பரிசீலனை செய்து, மொடக்குறிச்சி தொகுதியிலேயிருந்து 40 கிலோ மீட்டர் தூரம் ஈரோடு மாநகருக்கு வர வேண்டிய சூழ்நிலை இருக்கிற காரணத்தினாலும், அத்துணை ஆற்று துறைகளும் மொடக்குறிச்சி தொகுதியிலே இருக்கிற காரணத்தினாலும், மீன் வளர்ச்சி பயிற்சி மையத்தை அங்கே நிறுவுவதற்கு வருகிற நிதி ஆண்டிலாவது, பரிசீலனை செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11.20

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்நாட்டு மீன் வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக நம்முடைய போற்றுதற்குரிய தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய நல்லாட்சியில் எப்.எப்.டி.ஏ. Fish Farmers Development Agency என்று சொல்லக்கூடிய மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை செயல்பட்டு வருகின்றது. அந்த அடிப்படையிலே நம்முடைய பெரியார் மாவட்டத்தில் ஒரு மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை இயங்கி வருகிறது. இதுவரையில் அந்த மாவட்டத்தில் 243 நபர்கள் பயிற்சி பெற்றுள்ளார்கள். அந்த அடிப்படையிலே, அந்த இடத்திலே அந்த முகமை அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1995 மார்ச் 27

திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 243 பயிற்சியாளர்கள் மீன் வளர்ப்பு பயிற்சி மையத்தின் மூலம் பயிற்சி பெற்றிருக்கிறார்கள் என்ற தகவலை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்ததற்கு நன்றி. பெரியார் மாவட்டத்திலே அந்த மையம் இருக்கிற காரணத்தினாலும், ஆனால் அதிகமான மீன் பிடித்து, அதிகமான மீன் வளர்ச்சிக்கு பயன்படக்கூடிய தொகுதியாக மொடக்குறிச்சி தொகுதி இருக்கிற காரணத்தினாலும், பெரியார் மாவட்டதில் இருக்கிற அந்த மீன் வளர்ச்சி மையத்திற்கு உறுதுணையாக இருக்கக்கூடிய அளவிலே மேலும் ஒரு மீன் வளர்ச்சி மையத்தை அமைத்து அதன் மூலமாக 243 பேர்களை 2 ஆயிரம் பேராக உயர்த்தக்கூடிய அளவுக்கு அங்கு பல்வேறு சென்னிமலை, அரசலூர், பூந்துறை போன்ற பகுதிகளில் எல்லாம் குளங்களில் அதிகமான மீனவர்கள் மீன்பிடிக்கிற காரணத்தினாலும், இந்த அருமையான பெருமைக்குரிய வகையில், இதுவரையில் யாருமே கண்டிராத அளவுக்கு 1½ மாமாங்கமாக வரி சுமையிலே அமிழ்ந்து கொண்டிருந்த மக்களுடைய இதயத்தை குளிர வைக்கக் கூடிய வகையிலே இந்த நாட்டிலேயே, இந்த ஊரிலேயே இந்த உலகத்திலேயே சிறப்பாக விளங்கக் கூடிய அளவுக்கு வரி இல்லாத பட்ஜெட்டை தாக்கல் செய்து, அத்துணை பேர்களுடைய இதயத்திலே நிறைந்து இருக்கிற புண்ணியத்தலைவி, புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே எங்களுடைய மொடக்குறிச்சி தொகுதியிலே 2-வது மீன் வளர்ச்சி மையத்தை ஆரம்பிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்நாட்டு மீன் வளத்தை மேம்படுத்துவதற்காகத்தான் நம்முடைய ஆற்றல் மிக்க இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 12 முகமைகளை தமிழகத்திலே இயங்கச் செய்து, அதிலே ஒரு முகைமையாக பெரியார் மாவட்டத்திலே இயங்கச் செய்திருக்கிறார்கள். ஏறக்குறைய 243 பேர்களுக்கு கடந்த காலத்தில் பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பயிற்சி நிறுவனங்களுக்கு வசதியாக வந்து சேர வாகன வசதிகளை செய்து தரவேண்டும் என்பதற்காக வாகனப்படியும் அளிக்கப்படுகிறது. அதிலே எந்தவித சிரமமும் இல்லை. ஒவ்வொரு ஊரிலேயும் ஒரு முகமை ஆரம்பிக்கப்பட வேண்டும் என்றால் அதற்கு நிர்வாக செலவுகள் அதிகம் பிடிக்கும் என்கிற காரணத்தினால் உறுப்பினர்களுடைய கோரிக்கையை ஏற்க இயலாத நிலையிலே இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.